2005 ஏப்ரல் 4]

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொத்தாம்பொதுவாக இந்த முதியோர் இல்லங்கள் சரியாக நடைபெறவில்லை என்றும், பணம் வசூலிக்கின்றார்கள் என்றும் கூறினார். எந்தப் பகுதியிலே எந்த முதியோர் இல்லத்தில் இதுபோன்று பணம் வசூலிக்கின்றார்கள் என்பதனை நீங்கள் எழுதிக் கொடுப்பீர்களானால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதனை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 290, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

290—

மருத்துவர் நியமனம்

***24907—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட தலைமை மருத்துவமனைகளில் சித்த வைத்தியப் பிரிவில் ஆண் மருத்துவர் மற்றும் பெண் மருத்துவர் ஆகிய இருவரை நியமிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களில் உள்ள தலைமை மருத்துவமனைகளில் உள்ள சித்த வைத்தியப் பிரிவுகளில் பணிபுரிய ஆண் மருத்துவர், பெண் மருத்துவர் என இருவரை நியமனம் செய்ய தற்பொழுது கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழருடைய பரம்பரை வைத்தியமாகிய சித்த வைத்தியப் பிரிவு, தற்போது மிகச் சிறப்பான முறையிலே பொதுமக்களிடத்திலே வரவேற்பு பெற்றிருக்கிறது. ஆகையாலே, மிக அதிக அளவிலே சித்த வைத்தியப் பிரிவுக்குப் பொதுமக்கள் சென்று சிகிச்சை பெறுகிறார்கள். அதுவும் குறிப்பாக, பெண் நோயாளிகளும், ஆண் நோயாளிகளும், மிக அதிகமாகச்

செல்வதால், அங்கு மருத்துவர்கள் இருபாலோரையும் நியமிக்க, அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களாக இருந்தாலும்சரி, மாவட்ட அரசு மருத்துவமனைகளாக இருந்தாலும் சரி, அதேபோல் தாலுகா மருத்துவமனைகளாக இருந்தாலும்சரி, ஆங்காங்கே இருக்கக்கூடிய காலியிடங்களை, அதுவும் குறிப்பாக சித்த மருத்துவர்களை நியமிப்பதிலே அரசு இதுவரையிலும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்னர் இதுவரையிலும் கிட்டத்தட்ட 211 சித்த மருத்துவர்களை நியமித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாவட்டவாரியாக கேட்கும்போது திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், திண்டுக்கல், நீலகிரி ஆகிய மாவட்டங்களிலே பெண் மருத்துவர்கள் பணியில் அமர்த்தப்பட்டு அவர்கள் அங்கே மருத்துவ உதவிகள் செய்து வருகிறார்கள். அதேபோல் மற்ற மாவட்டங்களில் இருக்கக்கூடிய தலைமை மருத்துவமனையிலும் ஒரு தலைமை மருத்துவமனையை எடுத்துக்கொண்டால் அங்கே ஒரு District Medical Officer அதாவது மாவட்ட தலைமை மருத்துவ அலுவலரும் அவருக்குத் துணையாக ஓர் உதவி சித்த மருத்துவ அலுவலரும் பணியாற்றி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று – இந்த 30 மருத்துவர்களும், கிட்டத்தட்ட 211 மருத்துவர்களும் அங்கு இருக்கக்கூடிய அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் இருக்கக்கூடிய மருத்துவர்களும் பணிகளைப் பார்த்து அதேபோல் அங்கே இருக்கக்கூடிய அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தில் இருக்கக்கூடிய மருத்துவர்களையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று – வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கேற்ப கூடுதலாக ஒரு மருத்துவரை நியமிக்க வேண்டுமென்று

2005 ஏப்ரல் 4]

ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப அதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

ஜப்பான் நிதி நிறுவன உதவியுடன் காடு வளர்ப்புத் திட்டம் செயல்படுத்துதல்—மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர். பி. உட்காருங்கள். முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கை இருக்கிறது. பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லுகின்றபோது பெருகி வரும் தொழிற்சாலைகள், நகர்மயம் ஆதல் ஆகியன தவிர்க்க இயலாதவையாக அமைந்துவிடுகின்றன. அத்துடன் மக்கள் தொகைப் பெருக்கமும் சேர்கின்றபோது இதனுடைய விளைவுகள் இயற்கைச் சூழலுக்குப் பங்கம் விளைவித்து சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்துவிடுகின்றன. நாட்டின் வளர்ச்சிப் பணிகளும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளும் ஒன்றுக்கு ஒன்று பாதிப்பு இல்லாத வகையில் பின்னிப் பிணைந்து செயல்படுவதன்மூலமே நீடித்து நிலைத்து நிற்கும் சமூகப் பொருளாதார வளர்ச்சியை நமது வருங்கால சந்ததியினருக்கு நாம் அளிக்க முடியும். எனவேதான், தமிழகத்தின் மேம்பாட்டுப் பணிகளுக்கும் வளர்ச்சிப் பணிகளுக்கும் எந்த அளவு உயரிய